தினகரன்

5.2.2008
திருச்சி.

## பிரசவத்திற்கு சேர்க்கப்பட்டவர் திடீர் சாவு

# மனைவி மரணத்தில் சந்தேகம்

### ஆட்சியரிடம் கணவர் மனு

திருச்சி, பிப். 5: திருச்சி அரசு மருத்துவமனையில் பிரசவத்திற்கு சேர்க்கப்பட்டவர் திடீரென இறந்தார். அவரது சாவில் சந்தேகம் இருப்பதாக கணவர் ஆட்சியரிடம் புகார் மனு அளித்துள்ளார்.

திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் ஆசிஷ் வச்சானி தலைமையில் நேற்று குறைதீர் நாள் முகாம் நடந்தது. டிஆர்ஓ நம்பிராஜன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டு மனுக்களை பெற்றனர்.

திருச்சி ஏர்போர்ட் பகுதியை சேர்ந்த மாரிக்கண்ணு என்கிற சகுந்தலாதேவி தந்த மனுவில், பொன்னேரிபுரத்தை சேர்ந்த பன்னீர்செல்வம் என்பவருடன் கடந்த ஆண்டு நவம்பர் 15ம்தேதி எனக்கு திருமணம் நடந்தது. அவருக்கு நான் இரண்டாவது மனைவி. திருமணத்தின் போது, 5பவுன் நகை கொடுக்கப்பட்டது. தறபோது மேலும், 10பவுன் நகை கேட்டு அடித்து கொடுமைப்படுத்துகிறார். பொன்மலைப்பட்டி போலீஸ் நிலையத்தில் புகார் தந்துள்ளேன். எனக்கு நியாயம் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என மனுவில் தெரிவித்துள்ளார்.

தென்னிந்திய மனித உரிமைகள் பாதுகாப்பு கவுன்சில் மாவட்ட அமைப்பாளர் மணி தந்த மனுவில், மண்ணச்சநல்லூர் காவல் நிலைய பகுதிகளில் கள்ளச்சாராயம்,

தடை செய்யப்பட்ட லாட்டரிச்சீட்டு, விபச்சார செயல்களும் நடக்கிறது. தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மனித உரிமைக்கான குடிமக்கள் இயக்க வட்டார அமைப்பாளர் முஹம்மது இப்ராகிம் தந்த மனுவில், கடந்த ஒரு மாதமாக ஆவின் நிர்வாக அனுமதி பெற்ற வினியோகஸ்தர்களுக்கு வழங்கப்படும் பால் 50சதவீதம் முதல் 60சதவீதம் வரை குறைத்து வழங்கப்படுகிறது. இதனால், பொதுமக்கள் தனியார் நிறுவனங்களுக்கு மாறி வருகின்றனர். இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

ஸ்ரீரங்கம் இனாம்புலியூரைச் சேர்ந்த சங்கிலிமுத்து தந்த மனுவில், எனது மனைவி இளையராணியை(27) இரண்டாவது பிரசவத்துக்காக திருச்சி அரசு மருத்துமனையில் கடந்த ஜனவரி 27ம்தேதி மாலை 7மணிக்கு சேர்த்தேன். 11மணியளவில் ஆண்குழந்தை பிறந்தது. மறுநாள் காலை 12.30 மணியளவில் இளையராணி திடீரென இறந்து விட்டார். உடலை பிரேத பரிசோதனை கூட செய்யாமல் அவசர அவசரமாக அனுப்பி விட்டனர்.

டாக்டர்கள் செய்த அறுவைசிகிச்சையில் சந்தேகம் உள்ளது. இது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.